**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 425/2025**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி | தாலுகா | : | கல்குளம் |
| தந்தை பெயர் | : | முருகேசன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | குளச்சல் | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 3rd, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019ம் வருடம் ஊத்துமலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் வெங்கடேஷ் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த காவல்நிலைய குற்ற எண்.238/2019 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சாட்சிகள் உதவி ஆய்வாளர் வெங்கடேஷ், காவலர் அழகுராஜா, மாரிராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென தெரிய வந்ததினால் ஏற்கனவே உதவி ஆய்வாளர் நிலையத்தில் கைது செய்து வைத்திருந்த எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.2 ஆகும்.

வழக்கு சொததுக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி கனம் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர் ஜேம்ஸ்அந்தோணிராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தடயஅறிவியல் ஆய்வக அறிக்கை பெற்றேன். அந்த ஆய்வக அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

பகுப்பாய்வு மாதிரியை உதவி ஆய்வாளர் எடுத்து சீல் வைத்துள்ளார். சம்பவயிடத்தில் உள்ள பொதுமக்களை நான் விசாரிக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை, யாரும் முன்வரவில்லை. எழுத்து மூலமாக சாட்சியம் அளிக்க யாரையும் அழைக்கவில்லை. SHO சீல் உதவி ஆய்வாளர் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியிடமிருந்து எந்தவிதமான பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், நான் காவல்நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து, அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி நாகர்கோவில் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt.D.Sahayarani, Assistant, முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.03 19:24:48 +0530